www.Padasalai.Net www.CBSEtips.in

Tsi-8T

தென்காசி மாவட்டப் பொதுத் தேர்வுகள்

காலாண்டுப் பொதுத் தேர்வு - செப்டம்பர் 2022

# வகுப்பு 8

## தமிழ்

காலம்: 2.30 மணி மதிப்பெண்கள்: 100

### பகுதி - I (மதிப்பெண்கள் : 20)

உரிய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் எழுதுக: **15×1=15**

1) மக்கள் வாழும் நிலப்பகுதியைக் குறிக்கும் சொல் .................
அ) வைப்பு ஆ) கடல் இ) பரவை ஈ) ஆழி
2) பறவைகள் ................. பறந்து செல்கின்றன.
அ) நிலத்தில் ஆ) விசும்பில் இ) மரத்தில் ஈ) நீரில்
3) இயற்கையைப் போற்றுதல் தமிழர் .................
அ) மரபு ஆ) பொழுது இ) வரவு ஈ) தகவு
4) தமிழ் எழுத்துச் சீர்திருத்தப் பணியில் ஈடுபட்டவர் .................
அ) பாரதிதாசன் ஆ) தந்தை பெரியார்
இ) வ.உ.சிதம்பரனார் ஈ) பெருஞ்சித்திரனார்
5) இதழ்களைக் குவிப்பதால் பிறக்கும் எழுத்துகள் .................
அ) இ, இ, ஈ ஆ) உ, இ, ஊ இ) எ, இ, ஏ ஈ) அ, இ, ஆ
6) 'நன்செய்' - என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது .................
அ) நன்+செய் ஆ) நன்று+செய் இ) நன்மை+செய் ஈ) நல்+செய்
7) வானில் கரு ................. தோன்றினால் மழைபொழியும் என்பர்.
அ) முகில் ஆ) துகில் இ) வெயில் ஈ) கயல்
8) செவ்விந்தியர்கள் நிலத்தைத் ................. மதிக்கின்றனர்.
அ) தாயாக ஆ) தந்தையாக இ) தெய்வமாக ஈ) தூய்மையாக
9) 'நலமெல்லாம்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது .................
அ) நலம்+எல்லாம் ஆ) நலன்+எல்லாம் இ) நலம்+எலாம் ஈ) நலன்+எலாம்
10) சமையலறையில் செலவிடும் நேரம் ................. செலவிடும் நேரமாகும்.
அ) சுவைக்காக ஆ) சிக்கனத்திற்காக
இ) நல்வாழ்வுக்காக ஈ) உணவுக்காக
11) கீழ்க்காணும் சொற்களில் பெயரெச்சம் .................
அ) படித்து ஆ) எழுதி இ) வந்து ஈ) பார்த்த
12) கடைப்பிடித்தல் - இச்சொல்லின் பொருள்
அ) கடையைப் பிடித்தல் ஆ) வாழ்தல் இ) பின்பற்றுதல் ஈ) நிலைநிறுத்தல்
13) 'கலனல்லால்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது .................
அ) கலன்+லல்லால் ஆ) கலம்+அல்லால்
இ) கலன்+அல்லால் ஈ) கலன்+னல்லால்
14) கல்விப் பயிற்சிக்குரிய பருவம் .................
அ) இளமை ஆ) முதுமை இ) நேர்மை ஈ) வாய்மை
15) இன்றைய கல்வி ................. நுழைவதற்குக் கருவியாக கொள்ளப்பட்டு வருகிறது.
அ) வீட்டில் ஆ) நாட்டில் இ) பள்ளியில் ஈ) தொழிலில்

கோடிட்ட இடத்தை நிரப்புக: **5×1=5**

16) கடைச்சங்க காலத்தில் எழுதப்பட்ட தமிழ் எழுத்துகள் ................. என அழைக்கப்பட்டன.
17) எழுத்துகளில் புள்ளிகளால் ஏற்படும் குழப்பங்களைக் களைந்தவர் .................
18) விலங்கொடு ................. அனையர் ................. கற்றாரோடு ஏனை யவர்.
19) குறிப்பு வினையெச்சம் ................. வெளிப்படையாகக் காட்டாது.
20) வாழ்விற்குரிய இன்பத்துறைகளில் தலையாயது ................. இன்பம் ஆகும்.

### பகுதி - II (மதிப்பெண்கள் : 10)

அடிமாறாமல் எழுதுக: **6+4=10**

21) 'வாழ்க நிரந்தரம்' எனத் தொடங்கும் பாடலை எழுதுக.
22) 'கற்றோர்க்கு' எனத் தொடங்கும் பாடலை எழுதுக.
23) 'தக்கார்' எனத் தொடங்கும் குறளை எழுதுக.
24) 'இறைக்கு' என முடியும் குறளை எழுதுக.

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

www.Padasalai.Net www.CBSEtips.in



## பகுதி - III (மதிப்பெண்கள் : 18)

**எவையேனும் ஒன்பது வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க:** 9×2=18

25) தமிழ் எவற்றை அறிந்து வளர்கிறது?

26) ஓடை எழுப்பும் ஒலிக்கு எதனை உவமையாக வாணிதாசன் கூறுகிறார்?

27) கொல்லிமலை பற்றிப் பாடல் கூறும் செய்தி யாது?

28) வீரமாமுனிவர் மேற்கொண்ட எழுத்துச் சீர்திருத்தங்களில் எவையேனும் இரண்டனை எழுதுக.

29) நிலத்திற்கும் செவ்விந்தியர்களுக்கும் உள்ள உறவு யாது?

30) இன்றைய கல்வியின் நிலை பற்றித் திரு.வி.க கூறுவன யாவை?

31) சான்றோர்க்கு அழகாவது எது?

32) தெரிநிலை வினைமுற்று எவற்றைக் காட்டும்?

33) **கலைச்சொற்கள் தருக:**

அ) Epigraph ஆ) Millets

34) **தொடர்களை மாற்றுக:**

அ) நேற்று நம் ஊரில் மழைபெய்தது. **(வினாத்தொடராக மாற்றுக)**

ஆ) காடு மிகவும் அழகானது. **(உணர்ச்சித் தொடராக மாற்றுக)**

35) எழுவாய் வேற்றுமையை விளக்குக.

36) **சரியான மரபுச் சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக:**

அ) கோழி .................. (கூவும் / கொக்கரிக்கும்)

ஆ) பால் .................. (குடி / பருகு)

## பகுதி - IV (மதிப்பெண்கள் : 16)

### பிரிவு - 1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமான விடையளிக்க:** 4×4=16

37) புயல் காற்றினால் மரங்களுக்கு ஏற்பட்ட நிலைகளாகப் பாடல் குறிப்பிடும் கருத்துகள் யாவை?

38) உடல் நலத்துடன் வாழக் கவிமணி கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

39) பள்ளிக் குழந்தைகளுக்கு மருத்துவர் கூறும் அறிவுரைகள் யாவை?

40) அறிவியல் கல்வி பற்றித் திரு.வி.க கூறுவன யாவை?

41) ஏவல் வினைமுற்றுக்கும் வியங்கோள் வினைமுற்றுக்கும் இடையேயுள்ள வேறுபாடுகள் யாவை?

42) வினையெச்சத்தின் வகைகளை விளக்குக.

## பகுதி - V (மதிப்பெண்கள் : 21)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க:** 3×7=21

43) அ) எழுத்துகளின் தோற்றம் குறித்து எழுதுக.

**(அல்லது)**

ஆ) தமிழர் மருத்துவத்தின் சிறப்புகளாக மருத்துவர் கூறும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

44) அ) 'வெட்டுக்கிளியும் சருகுமானும்' இக்கதையைச் சுருக்கி எழுதுக.

**(அல்லது)**

ஆ) மூளையின் வலது, இடது பாகங்களின் செயல்பாடுகள் பற்றி தொகுத்து எழுதுக.

45) அ) விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற உன் நண்பனுக்குப் பாராட்டுக் கடிதம் எழுதுக. **(அல்லது)**

ஆ) நோய்வராமல் தடுக்கும் வழிமுறைகள் பற்றி உன் நண்பனுக்குக் கடிதம் எழுதுக.

## பகுதி - VI (மதிப்பெண்கள் : 8)

**கட்டுரை வடிவில் விடையளிக்க:** 1×8=8

46) அ) நான் விரும்பும் கவிஞர் **(அல்லது)**

ஆ) நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்

முன்னுரை - நோய் வரக் காரணங்கள் - நோய் தீர்க்கும் வழிமுறைகள் - வருமுன் காத்தல் - உணவும் மருந்தும் - உடற்பயிற்சியின் தேவை - முடிவுரை.

## பகுதி - VII (மதிப்பெண்கள் : 7)

**சிந்தனை வினாவிற்கு விடையளிக்க:** 1×7=7

47) அ) இயற்கைச் சீற்றங்களால் பாதிப்பு ஏற்படாமல் தவிர்க்கச் செய்ய வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளாக நீங்கள் எவற்றைக் கருதுகிறீர்கள்?

**(அல்லது)**

ஆ) கல்வியின் பயன்களாக நீங்கள் கருதுவனவற்றை எழுதுக.

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593